**செய்தி வெளியீடு எண்: 272** **நாள்: 25.04.2012**

**எச்.ஐ.வி. / எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ள**

**தமிழகத்தில் செஞ்சுருள் விரைவு தொடர் வண்டி வருகை**

**09.05.2012 முதல் 29.05.2012 வரை**

**மாநில அளவிலான ஆயத்த எற்பாடுகளை ஒருங்கிணைக்க, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு.தேபேந்திரனாத் சாரங்கி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.04.2012) ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைப்பெற்றது.**

செஞ்சுருள் விரைவு தொடர் வண்டி திட்டமானது, எச்.ஐ.வி. / எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா போன்ற நோய்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத்திட்டங்கள் பற்றி விழிப்புணர்வினை கிராமப்புறங்களில் உள்ள மக்களிடையே சென்றடைய, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மூன்றாவது கட்டத்திற்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட செஞ்சுருள் விரைவு தொடர் வண்டி ஜனவரி மாதம் 12ம் தேதி டில்லியில் இருந்து துவக்கி வைக்கப்பட்டது. இந்த முறை இந்த இரயில், இளைஞர்களை கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இரயிலானது 23 மாநிலங்களில் 162 இடங்களில் நிறுத்தப்படுகிறது. 8 கண்காட்சி பெட்டிகள் கொண்ட இந்த விரைவு இரயிலில் முதல் நான்கு பெட்டிகளில் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றியும், நான்காவது பெட்டியில் தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தில் காசநோய், மலேரியா, பன்றிக்காய்ச்சல், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் பற்றியும், பொது ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் பற்றியும், விழிப்புணர்வு விளக்க கண்காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு பெட்டி ஆலோசனை மையமாக செயல்படும் வகையிலும், மற்றொரு பெட்டியில், சுய உதவிக் குழு பெண்கள், சுகாதார நலப்பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் காவல்துறையினர் போன்றோர்களுக்கு பயிற்சி பெறும் வகையில் பயிற்சி அரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் செஞ்சுருள் விரைவு இரயில் நிற்கும் 10 மாவட்டங்கள்:– கன்னியாகுமரி (09.05.2012 மற்றும் 10.05.2012), திருநெல்வேலி (11.05.2012 மற்றும் 12.05.2012), திண்டுக்கல் (13.05.2012 மற்றும் 14.05.2012), கரூர் (15.05.2012 மற்றும் 16.05.2012), இராமநாதபுரம் (19.05.2012 மற்றும் 20.05.2012), சிவகங்கை (21.05.2012 மற்றும் 22.05.2012), நாகப்பட்டினம் (23.05.2012 மற்றும் 24.05.2012), வேலூர்–கண்டோன்மெண்ட் (26.05.2012) மற்றும் சென்னை சென்ட்ரல் (27.05.2012 மற்றும் 28.05.2012).

செஞ்சுருள் விரைவு இரயில் வண்டியின் முக்கிய குறிக்கோள்கள்:–

1. இந்த திட்டமானது கிராமப்புற மக்களை சென்றடையும் குறிக்கோளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.
2. முதற்கட்ட தடுப்பு மற்றும் சேவைகள் பற்றிய விபரங்கள் தெரிவித்தல்
3. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பற்றிய தெளிவான புரிதலின் மூலம் எச்.ஐ.வி. உள்ளோர்களை ஒதுக்குதல் மற்றும் கறைப்படுத்துதல் போன்றவற்றை குறைத்தல்.
4. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தடுப்பிற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

5. பாதுகாப்பான வாழ்க்கை முறையை கடைப்பிடித்தல் பற்றிய விபரங்களை தெரிவித்தல்.

இந்த இரயில் வண்டி திட்ட இலக்கு மக்கள் மற்றும் பொது மக்களை சென்றடையவும், குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான குழுக்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

1. கிராமப்புற மற்றும் நகர்ப்புறத்தில் வாழும் இளைஞர்கள்
2. சுய உதவிக்குழுக்களை சேர்ந்த பெண்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆஷா பணியாளர்கள் மற்றும் செவிலியர்கள்
3. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் வளர்இளம் பருவ மாணவ மாணவிகள்
4. ஊராட்சி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள்
5. பள்ளியில் இடை நின்ற இளைஞர்கள், நேரு யுவகேந்திரா உறுப்பினர்கள் முதியோர் கல்வி உறுப்பினர்கள்
6. மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள்
7. திட்டங்களை உருவாக்குபவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்.

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழுவானது தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு.தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. அவர்களின் தலைமையில், தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதன்மைச் செயலர் டாக்டர்.கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் துணைத்தலைவராகவும், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர்.ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., அவர்கள் ஒருங்கிணைப்பாளராகவும் கொண்டு உருவாக்கப்பட்ட இக்குழுவின் கூட்டம் 24.04.2012 அன்று தலைமைச் செயலகத்தில் நடைப்பெற்றது. இதில் பல்வேறு அரசுத்துறைகளின் செயலர்கள், காவல்துறை அதிகாரிகள், தெற்கு இரயில்வே, அரசுத்துறை ஆணையர்கள் / இயக்குநர்கள், தகவல் ஒலிபரப்புத்துறை ஆகிய உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர்.ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்று இந்த திட்டத்தைப் பற்றிய விளக்கவுரை ஆற்றினார்கள்.

தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதன்மைச் செயலர் டாக்டர்.கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்கள் இந்த இரயிலின் தமிழ்நாட்டுப் பயணம் முழுமையாக வெற்றியடைய ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்களும் செய்ய வேண்டிய பணிகள் பற்றி எடுத்துரைத்தார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. அவர்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர்கள், துறைத்தலைவர்கள், அலுவலர்களும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை சிறப்பாகவும், முனைப்புடனும், கடமையுணர்ச்சி–யுடனும் பணியாற்ற வலியுறுத்தினார்கள். சிறப்பாக செயல்படும் மாவட்டத்திற்கும் மற்றும் துறைகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள் என்று தலைமைச் செயலாளர் அறிவித்தார்கள் .

**(ஆ.சி.மோகன்தாஸ்)**
**திட்ட இயக்குநர்**
**தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**